தொழிற்சாலைக்குத் தண்ணீர் கொடுக்கின்ற பிரச்சினை வரும் எந்த அளவீற்குத் தண்ணீர் இருக்கிறது, விவசாயப் பகுதிகள் பாதிக்கப்படுமா, அங்கேயிருக்கிற நிலத்தடி நீரின் பிரச்சினையும் ஆராயப்படும். அதற்குப் பின்னாலே அங்கேயிருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற பாசன தண்ணீரினுடைய அளவும் கணக்கிடப்படும். இந்த அடிப்படையிலே இவைகளையெல்லாம் பாதிக்கப்படாமல் இருந்தால்தான் அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்குகின்ற அனுமதியை அரசு தரும். ஆகவே, அரசினுடைய பரிசீலனையில்தான் இருக்கிறதே தவிர, அரசினுடைய கருத்துரு இன்னும் முடிவு பெறவில்லை. ஆகவே, இது சம்பந்தமாக உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, ஒரு முடிவான ஆய்வினை உயர் அதிகாரிகளை வைத்து, எக்ஸ்பர்ட் என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறையிலே இருக்கின்றவர்களையெல்லாம் வைத்து அதற்கான பரிசீலனையைச் செய்து, எல்லா நலன்களையும் கருத்திற் கொண்டு இந்த அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

(ஆ) கோவை மாவட்டத்திலுள்ள லட்சுமி நிறுவன நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு, திரு. சிங்கை கோவிந்தராசு, திரு. கே. பி. ராஜு ஆகியோரில், ஒருவர், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள எனது சிங்காநல்லூர் தொகுதியிலுள்ள, ஒரே நிர்வாகத்திற்குக் கீழே மூடிக்கிடக்கின்ற லட்சுமி மில்ஸ்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே இருப்பதை அப்படியே சொல்லுங்கள்; அஜெண்டாவில் இருக்கிற வாசகங்களைப் படியுங்கள். கையிலே நீங்கள் வைத்திருப்பதை வாசிக்கக் கூடாது.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலுள்ள லட்சுமி நிறுவன நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து" அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

கோயம்புத்தூர், சிங்காநல்லூர் பல்லடம் மற்றும் பாப்ப நாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள லட்சுமி மில்ஸ் கம்பெனி லிமிடெட் ஆலைகளில் முறையே 1,215, 956 மற்றும் 1,397 ஆக மொத்தம் 3,568 தொழிலாளர்கள் பணிபுரிகின் றனர்.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு முதலியன குறித்த தொழில் தாவாவை இவ்வரசு தனித் தொழிலாளர் தீர்ப்பாயத்திற்கு தீர்ப்புக்கு அனுப்பி 1992 டிசம்பர் மாதம் ஆணை பிறப்பித்தது. தொழிலாளர்கள் பிரச்சினைகள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட அதே சமயம் இடைக்கால நிவாரணமாக மாதாமாதமும் ஒட்டுமொத்தமாகவும் தொகைகள் ஆலை நிர்வாகங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணைகள் பிறப்பித்தது.

இந்த ஆணைகளை எதிர்த்து 60-க்கும் மேற்பட்ட பஞ் சாலை நிர்வாகங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக் கள் தாக்கல் செய்து அந்த ஆணைகள் மீது உயர்நீதிமன்ற தடை உத்தரவும் பெற்றனர். இவ்வாறு உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றதைத் தொடர்ந்து மேலே குறிப்பிட்டுள்ள ஆலைகளின் தொழிலாளர்கள் 1992 டிசம்பர் மற்றும் 1993 ஜனவரி ஆகிய மாதங்களுக்கு உரிய இடைக்கால நிவாரணத் தொகைகள் வழங்க வேண்டும் என 11—2—1993 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதே போல் அரசு அறிவித்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் இடைக்கால நிவாரணம், ஒட்டுமொத்தத் தொகையை இப்பஞ்சாலை நிர் வாகம் தொழிலாளர்களுக்கு அளிக்காமையால் பொள்ளாச்சி விஜயேஸ்வரி ஆலையிலுள்ள 722 தொழிலாளர்கள் 7—2—1993 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்கண்ட உயர்நீதிமன்றத் தடையுத்தரவின்மீது சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்சுக்கு தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு செய்த மேல் முறையீட்டின் பேரில், சென்னை உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்சு, ஏற்கனவே உயர்நீதிமன்ற தனி நீதிபதி விதித்த தடை உத்தரவுக்கு தடை விதித்து 2—3—1993 அன்று ஆணைகள் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) 1, நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களிடையே பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு தொழிலாளர்கள் உடன் பணிக்குத் திரும்பவும் அரசாணையை அமுல்படுத்த நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினைகள் தனித் தொழில் தீர்ப்பாயத்தின் முன்பும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் நிலுவையில் இருந்த போதும் உயர்நீதிமன்ற அவமதிப்புக்கு உள்ளாகாத வகையில் தொழிலாளர் துறையால் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரச்சினை உயர்நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளதால் இது குறித்து அரசு கருத்து ஏதும் தெரிவிக்க வழி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு, அதுபற்றி ஏதாவது ஒரு கேள்வி கேட்கவேண்டும்.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள எனது தொகுதியான சிங்காநல்லூரில்லும், பல்லடத்திலும், பொள்ளாச்சியிலும் 4 பஞ்சாலைகள் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன. அவை மூடப்பட்டதால், அந்தப் பஞ்சாலைகளில் பணியாற்றுகிற 3,750 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த 2 மாத காலமாக அந்த ஆலைகள் மூடப்பட்டதால், ஊதிய உயர்வு கொடுக்க மறுக்கிற அந்த ஆலை முதலாளிகளிடத்திலே, தமிழக அரசால் கொடுக்கப்பட்ட அந்த 10-பி என்ற பிரிவின்கீழ், தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ், அரசாணையின் கீழ், நிறைவேற்றப்படாமல் இருக்கக்கூடிய அந்த கோரிக்கையைக் கேட்டு, தொழிலாளர்கள் இன்றையதினம் தமிழக அரசினுடைய தலையீட்டை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை உயர்நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளதால், இதுகுறித்து அரசு ஏதும் கருத்து தெரிவிக்கும் நிலையில் இல்லை என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கருத்துருவில் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3,750 தொழிலாளர் குடும்பங்களின் நலன்கருதி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் வைத்திருக்கிற அந்த விளக்க அறிக்கையில், உங்களுடைய விளக்கத்தை ஒரு கேள்வியாகக் கேட்க வேண்டும். நீங்கள் அறிக்கையில் இருப்பதை பூராவும் அப்படியே படித்துகொண்டிருக்கிறீர்கள். என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ அதைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி, ஆலைகளைத் திறக்க விரைவு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், சிங்காநல்லூர், பாப்புநாயக்கன்பாளையம், பல்லடம் ஆகிய இடங்களிலுள்ள லட்சுமி மில்ஸ் நிர்வாகத்திற்குச் சொந்தமான 3 நூற்பாலைகளும், பொள்ளாட்சி விஜயஸ்ரீ டெக்ஸ்டைல்ஸ் நூற்பாலைக்கான அந்த நூற்பாலையும், ஆக 4 நூற்பாலைகளும் இப்போது வேலை நிறுத்தத்தில் இருக்கின்றன. லட்சுமி மில்ஸ் நிர்வாகத்திற்குச் சொந்தமான நூற்பாலைகள் 11—2—1993 முதலும், விஜயஸ்ரீ நூற்பாலை 7—2—1993 முதலும் வேலைநிறுத்தத்தில் உயர்நீதிமன்றத்தினுடைய தடையாணையை எதிர்த்து இன்றைக்கு அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் பிறகு, கூட்டுக்குழு அந்தத் தடையாணையை ரத்து செய்து, மேல்முறையீட்டிலே ரத்து செய்து பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு உயர்நீதிமன்றத்தினுடைய அவமதிப்புக்கு ஆளாகாமல் ' Contempt of proceedings ' வராதபடிக்கு, தொழிலாளர் நலத்துறையின் சார்பில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தொழில் வளம் மிகுந்த மாவட்டம் ; பஞ்சாலைகள் அதிகம் மிகுந்த மாவட்டம். அதுபோல, லட்சுமி மில்ஸ் குரூப் என்பது, அதிகமான பஞ்சாலைகளை நடத்தி கொண்டிருக்கிறது. அவர்கள், சிங்காநல்லூர் தொகுதி, கோவை கிழக்குத் தொகுதி, பொள்ளாச்சி தொகுதி, பல்லடம் தொகுதி போன்ற இடங்களில் பஞ்சாலைகள் நடத்தி வருகிறார்கள். இவர்கள் போன அரசாங்கத்தினுடைய. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. கே. பி. ராஜு : போன அரசாங்கத்தினுடைய சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவது கிடையாது ; இப்போது போட்டிருக்கிற அரசாங்கத்தினுடைய சட்டதிட்டங்களுக்கும் அவர்கள் கட்டுப்படுவது கிடையாது. ஆகவே, தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு வந்த தகவல், இங்கே கோர்ட் நடவடிக்கை எதுவும் இல்லாமல், சொந்த பாகத் தகராறினால்தான் மில்கள் நிற்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய பாகத் தகராறினால் மில்கள் செயல்படாமல் இருப்பதால் 3,500 தொழிலாளர்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதற்குண்டான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் புரட்சி தலைவியிடம் சொல்லி, அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களை காப்பாற்றுகின்ற வகையில் தொழிலாளர் கோர்ட்டுகளை முடுக்கி விட்டு, துரிதமாக அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

[திரு. சே. ரகுபதி] [1993 மார்ச் 31

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 4,290 ஆகும். அரசாங்கம் ஆணைகள் இட்ட பிறகு, அந்த ஆணைகளை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று அதன்பிறகு அந்தத் தொழிலாளர்களுடைய கூட்டுக் குழு அந்தத் தடையுத்தரவை விலக்கிக் கொண்ட பிறகு இன்றைக்குப் புரட்சித்தலைவியினுடைய அரசு நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகாத வகையிலேதான் இந்தப் பேச்சுவார்த்தைகளில் எல்லாம் ஈடுபடமுடியும். இல்லையென்று சொன்னால் Contempt of Court Proceedings என்று வந்துவிடும். எனவே, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலே நாம் தொழிலாளர் நலத் துறையின் சார்பில் அந்த தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களையும், நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களையும், அழைத்துப் பேசி, உரிய வகையிலே சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத்துறை தலைவரின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 18-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது. அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 103-வது அறிக்கை.

(2) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 26-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 104-வது அறிக்கை.